



admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com


காலை நாளிதழ்






Vol: 02 | Issue: 362 | 4 Pages | 28.7.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 362 | 4 பக்கங்கள் | 28.7.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு**

**விளக்கம்:** பற்றில்லாதவனாகிய கடவுளுடைய பற்றை மட்டும் பற்றிக் கொள்ள வேண்டும், உள்ள பற்றுக்களை விட்டொழிப்பதற்கே அப் பற்றைப் பற்ற வேண்டும்.

## நடுவானில் மோதுவது போல் சென்ற விமானங்கள் விமானியின் சாமர்த்தியத்தால் அசம்பாவிதம் தவிர்ப்பு



வாஷிங்டன், ஜூலை 28

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் ஹாலிவுட் பர்பாங்க் விமான நிலையத்தில் இருந்து ரேடார் 24 என்ற விமானம் புறப்பட்டது. நடுவானில் சுமார் 14 ஆயிரம் அடி உயரத்தில் அந்த விமானம் சென்று கொண்டிருந்தது. அப்போது என்.335 ஏ.எக்ஸ். என்ற விமானம் அதன் மீது மோதுவது போல சென்றது.

இதனை சுதாரித்துக்கொண்ட விமானி உடனடியாக 500 அடி உயரத்துக்கு கீழே இறக்கினார். இதனால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. ஆனால் திடீரென விமானம் கீழே இறங்கியதில் அதில் இருந்த 2 பணிப்பெண்கள் காயம் அடைந்தனர். விமானம் தரையிறங்கியதும் அவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இந்த சம்பவம் குறித்து விமான போக்குவரத்து துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## துருக்கியில் காட்டுத்தீ; 14 பேர் பலி



அங்காரா, ஜூலை 28

துருக்கியில் கடந்த சில வாரங்களாக காட்டுத்தீ பரவி பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. இந் நிலையில், அந் நாட்டின் வடமேற்கே அமைந்த 4வது மிக பெரிய நகரான புர்சா நகரில் காட்டுத்தீ பரவி வருகிறது. இதனால், தலைநகர் அங்காராவுடனான சாலை இணைப்பு துண்டிக்கப்பட்டு உள்ளது.

தீயை அணைக்க 1,900க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் சென்றுள்ளனர். இதுபற்றி வனத்துறை மந்திரி இப்ராகிம் யுமாக்லி கூறும்போது, நேற்று 84 இடங்களில் தீயணைப்பு வீரர்கள், தீயை அணைத்து கட்டுக்குள் கொண்டு வந்தனர். கராபுக் உள்பட துருக்கியின் வடமேற்கு பகுதியானது மிகுந்த அச்சுறுத்தலுக்கு இலக்காகி உள்ளது என கூறியுள்ளார்.

துருக்கியில், இதுவரை இல்லாத வகையில் 122.9 டிகிரி பாரன்ஹீட் வெப்பநிலை பதிவாகி உள்ளது என அந்நாட்டு வானிலை இயக்குநரகம் தெரிவித்து உள்ளது. இந்த தீயை அணைக்கும் பணியில் தீயை அணைப்பு வீரர் ஒருவர் பலியாகி உள்ளார். காட்டுத்தீக்கு இதுவரை 14 பேர் பலியாகி உள்ளனர். 7 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் தீயில் கருகி விட்டன. 1,700 பேர் பாதுகாப்பான இடம் தேடி புலம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

## பாகிஸ்தான்: டயர் வெடித்ததில் பஸ் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து 9 பேர் பலி

இஸ்லாமாபாத், ஜூலை 29

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் இருந்து இன்று காலை 40 பயணிகளை ஏற்றிக்கொண்டு லாகூருக்கு பஸ் ஒன்று சென்றுகொண்டிருந்தது. இந்த பஸ் எம்2 மோட்டார் பாதை வழியாகசென்று கொண்டிருந்தது. அப்போது திடீரென பஸ்சின் ஒரு டயர் வெடித்தது. இதனால் பஸ் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து சாலை அருகில் உள்ள பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த கோர விபத்தில் சம்பவ இடத்திலேயே 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதனை தொடர்ந்து விபத்து குறித்து தகவலறிந்த போலீசார் மற்றும் மீட்பு குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். விபத்தில் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த நிலையில் காயமடைந்தவர்களில் ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். இதனால் பலி எண்ணிக்கை 9 ஆக அதிகரித்தது. விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

டயர் வெடித்து பஸ் பள்ளத்தில் கவிழ்ந்த விபத்தில் 9 பேர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## காங்கோ நாட்டில் தேவாலயத்திற்குள் புகுந்து பயங்கரவாதிகள் துப்பாக்கிசூடு 21 பேர் உயிரிழப்பு



கின்ஷாசா, ஜூலை 28

காங்கோ நாட்டின் கிழக்கு பகுதியில் உள்ள கொமாண்டா பகுதியில் அமைந்துள்ள ஒரு தேவாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிரார்த்தனை கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது திடீரென தேவாலயத்திற்குள் ஆயுதங்களுடன் புகுந்த பயங்கரவாதிகள், அங்கு இருந்தவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கிசூடு நடத்தினர்.

இதனால் அங்கிருந்த மக்கள் பயத்தில் சிதறியடித்து ஓடத் தொடங்கினர். அவ்வாறு ஓடியவர்களை துரத்திச்சென்று பயங்கரவாதிகள் சுட்டுக்கொன்றனர். மேலும் தேவாலயத்திற்கு அருகே இருந்த சில வீடுகள் மற்றும் கடைகள் தீவைத்து கொளுத்தப்பட்டன. இந்த கொடூர தாக்குதல் சம்பவத்தில் 21 பேர் உயிரிழந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த தாக்குதல் சம்பவத்தில் அரசு ஆதரவு பெற்ற மத அடிப்படைவாத அமைப்பை சேர்ந்த கிளர்ச்சியாளர்களுக்கு தொடர்பு இருப்பதாக சந்தேகம் எழுந்துள்ளது. தாக்குதலில் படுகாயமடைந்தவர்கள் பலர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# கடலூர்: ஸ்ரீ முஷ்ணம் ஏரியில் மூழ்கி சிறுவன் பலி: மு.க. ஸ்டாலின் நிவாரணம் அறிவிப்பு

சென்னை, ஜூலை. 28

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது:

கடலூர் மாவட்டம், ஸ்ரீ முஷ்ணம் வட்டம், ஸ்ரீ வக்காரமாரி கிராமம், மேட்டுத் தெருவைச் சேர்ந்த செல்வன். அப்துல் ஆசிம் (வயது 12) என்ற சிறுவன் (26.07.2025) காலை சுமார் 10.30 மணியளவில் ஸ்ரீ வக்காரமாரி குன்னத்தேரி என்ற ஏரியில் குளிக்கச் சென்றபோது எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.



மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்குரூ.3லட்சம்முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# திருப்பூர் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் ஆதரவுடன் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு இலவச கண் சிகிச்சை முகாம்

கோயம்புத்தூர்ச ங்கரா கண் மருத்துவமனை மற்றும் தாராபுரம்அருகில்உள்ளபோளரை கலைக் கோவில் வித்யா மந்திர்மெட்ரிக்மேல்நிலைப்பள்ளி இணைந்து தாராபுரம் சாரா நர்சிங் கல்லூரி நிறுவனர் டாக்டர் எம். ஜெய்லானி மற்றும் திருப்பூர் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் ஆதரவுடன் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு ஏழை எளிய மக்களுக்கு இலவச கண் சிகிச்சை முகாம் போளரை கலைக் கோவில் வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது.



இந்த பள்ளியின் தாளாளர் பொறியாளர் என். சுந்தரம் தலைமையில் இந்த பள்ளி முதல்வர் என். அரிமா நெஞ்சன், நிர்வாக அலுவலர் எஸ். சிவக்குமார் முன்னிலையில் நடைபெற்றது. இந்த முகாமை கல்வியாளர்டாக்டர்எம்.ெய்லானி தொடங்கி வைத்தார்.

இந்த பள்ளி ஆசிரியர்கள், அலுவலக பணியாளர்கள், மாணவ மாணவிகள் மற்றும் சுற்று வட்டாரத்தில் இருந்து ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டு பயன்அ டைந்தனர்.

முன்னதாக நிகழ்ச்சி அமைப்பாளர் ஆர். ராமர் அனைவரையும் வரவேற்றார்.

# காமராஜருக்கு எதிராக யார் பேசினாலும் பொறுத் துக் கொள்ள மாட்டோம்கே.வி.தங்கபாலு பேட்டி



களியக்காவிளை, ஜூலை 28

காங்கிரஸ் மாநில முன்னாள் தலைவரும் காங்கிரஸ் சொத்து பாதுகாப்பு குழு தலைவருமான கே.வி. தங்கபாலு நேற்று குமரி மாவட்டம் வந்தார். அவர் குழித்துறையில் உள்ள குமரி மேற்கு மாவட்ட காங்கிரஸ் அலுவலகத்தில் நடந்த கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார். பின் நிருபர்களிடம் கூறியதாவது:

காங்கிரஸ் வளர்ச்சிக்கு வழங்கப்பட்ட சொத்துகளை பாதுகாக்க, மீட்டு எடுக்க நாங்கள் இணைந்து ஒரு குழு அமைத்துள்ளோம்.

தமிழக முழுவதும் 95 சதவீதம் சொத்து காங்கிரசிடம் வந்துவிட்டது.

தமிழகத்தில் காங்கிரஸ் திமுக கூட்டணி 20 ஆண்டாக வெற்றி கூட்டணியாக உள்ளது. விஜய் கட்சியுடன் கூட்டணி பேச்சு என்பது குறித்து கூட்டணி கணக்கு போடத்தான் செய்வார்கள்.

அதை நாங்கள் ஆதரிக்கவும் மாட்டோம், எதிர்க்கவும் மாட்டோம். முன்னாள் முதல்அமைச் சர் காமராஜருக்கு எதிராக யார் பேசினாலும், நாங்கள் பொறுத்துக் கொள்ள மாட்டோம்.

இது தொடர்பாக தமிழக தலைவர் செல்வப்பெருந்தகை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து பேசினார். காங்கிரஸ் கொள்கை என்பது பூரண மதுவிலக்காகும். அதற்காக நாங்கள் தொடர்ந்து பாடுபடுவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள புத்தன்துறை பகுதியில் தடுப்புச்சுவர் அமைக்க வேண்டும் சீமான்

சென்னை ஜூலை 28

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

கன்னியாகுமரி மாவட்டம் புத்தன்துறை பகுதியில் கடல் அரிப்பால் வீடுகளையும், உடைமைகளையும் இழந்து அப்பகுதி மக்கள் தவித்து வருவது மிகுந்த மனவேதனை அளிக்கிறது. கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச்சுவர் அமைக்காமல் காலங்கடத்தி வரும் தி.மு.க. அரசின் அலட்சியப்போக்கு வன்மையான கண்டனத்துக்குரியது.

புத்தன்துறை பகுதியில் கடல் அரிப்பால் மக்களின்வாழ்விடங்களுக்குமிகப்பெரியபாதிப்பு ஏற்படும் என்று கடந்த ஓர் ஆண்டுக்கு முன்பே அப்பகுதி மக்கள் ஆட்சியாளர்களிடமும், அதிகாரிகளிடமும் மனு அளித்து முறையிட்டு வருகின்றனர். குறைந்தபட்சம் பாதிப்புகளிலிருந்து உடைமைகளை பாதுகாக்க ஒரு தற்காலிக அலை தடுப்பு சுவராவது அமைத்து தரவேண்டி கிராம மக்களும், மீனவர் நல அமைப்புகளும் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர். ஆனால் இவை எவற்றையும் கண்டுகொள்ளாத மாவட்ட ஆட்சியரும், அதிகாரிகளும் இதையே காரணம் காட்டி மக்களை அவர்களின் பூர்வீக வாழ்விடங்களைவிட்டு வெளியேற்ற நினைப்பது சிறிதும் மனச்சான்றற்ற பெருங்கொடுமையாகும்.

தி.மு.க. அரசின் அலட்சியம் காரணமாக புத்தன்துறையில் எவ்வித பாதுகாப்பு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதால், கடல் அரிப்பால் தற்போது 13 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மீனவச் சொந்தங்கள் சாலை மறியல் உள்ளிட்ட போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். மீனவ மக்கள் மீதான தி.மு.க. அரசின் அக்கறையின்மையே, இன்று புத்தன்துறை மக்கள் தங்கள் வீடுகளையும் உடைமைகளையும் இழந்து வீதியில் இறங்கி போராட வேண்டிய துயரநிலை ஏற்பட்டுள்ளது. மக்களுக்கு அவர்களின் வாழ்விடங்களிலேயே பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து கொடுக்க வேண்டிய மாவட்ட ஆட்சியர், பாதிக்கப்பட்டவர்களுக்கு வேறு பகுதிகளில் இடம் தருவதாக கூறி மீனவ மக்களை கடற்கரையை விட்டு வெளியேற்றுவது வெட்கக்கேடானது. ஒருபோதும் ஏற்க முடியாத கொடுங்கோன்மையாகும்.



கடல் சூழலியலை பாதிக்கும் கட்டுமானங்களை எவ்வித தடையுமின்றி செய்ய துணைநிற்கும் தி.மு.க. அரசு, இயந்திரங்கள், அதனால் ஏற்படும் சூழலியல் எதிர்விளைவான கடல் அரிப்பை தடுப்பதற்கான எவ்வித முயற்சியும் இதுவரை எடுக்காதது ஏன்? கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் அரிப்பு ஏற்பட்டுள்ள பகுதிகள் மற்றும் எதிர்காலத்தில் கடல் அரிப்பு ஏற்பட வாய்ப்பிருக்கும் பகுதிகள் அனைத்தையும் ஆய்வு செய்து அப்பகுதிகளுக்கு தகுந்த கடல் அரிப்பு தடுப்பு நடவடிக்களை மேற்கொள்ள வேண்டும் என்பது தான் ஒட்டுமொத்த மக்களின் ஒற்றை கோரிக்கையாகும்.

ஆகவே, கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள கன்னியாகுமரி புத்தன் துறை மக்களை அவர்களின் வாழ்விடங்களை விட்டு வெளியேற்றும் முடிவை கைவிட்டு, வீடுகளையும் விலைமதிப்பில்லா உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாக்க உடனடியாக பாதுகாப்பு தடுப்புச்சுவர் அமைத்து தர வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.




# நாம் தமிழர் கட்சி வேட்பாளர் பட்டியல் எப்போது வெளியாகும்? சீமான் பதில்



சென்னை, ஜூலை 28

நாம் தமிழர் கட்சி தனித்து போட்டி என்ற அறிவிப்பை பகிரங்கமாக அறிவித்து தமிழக அரசியலில் 2026 சட்டமன்ற தேர்தலை நோக்கிய பயணத்தில் வேகமாக களம் காண்கிறது. 2026 சட்டமன்ற தேர்தலில் சீமானும் களத்தில் குதிக்கிறார் என கட்சி வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இது அக்கட்சியினருக்கு ஊக்கத்தை கொடுத்து இருக்கிறது. இந்தநிலையில் செம்மணி மனித புதைக்குழி உள்பட மறைக்கப்பட்ட அனைத்து புதைக்குழிகள் குறித்து பன்னாட்டு சுதந்திர விசாரணை நடத்தக்கோரி நாம் தமிழர் கட்சி சார்பில் சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு நாம் தமிழர்கட்சியின்தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டம் முடிந்ததும் அவரிடம், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் பட்டியல் எப்போது வெளியாகும்? என்றுநிருபர்கள்எழுப்பிய கேள்விக்கு, 'விரைவில் மாநாடு நடத்தி நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் பட்டியலை அறிவிக்கிறேன்' என்றார்.

# நெல்லை: பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை போக்சோ சட்டத்தில் ஆசிரியர் கைது



திருநெல்வேலி ஜூலை 28

நெல்லை மேலப்பாளையம் ஆமீன்புரத்தைச் சேர்ந்தவர் ஹசன் அபுபக்கர். இவர் மேலப்பாளையத்தில் செயல்பட்டு வரும் தனியார் பள்ளியில் தாளாளராக இருந்து வருகிறார். இவருடைய மகன் ரபீக் (39 வயது). இவர் அதே பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். சம்பவத்தன்று ரபீக், 7ம் வகுப்பு படிக்கும் மாணவி ஒருவரை தனியாக அழைத்து சென்று பாலியல் தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது. மேலும் இதை யாரிடமும் சொல்லக்கூடாது என்று மிரட்டியதோடு, சாக்லெட் வாங்கி சாப்பிடுமாறு பணம் கொடுத்துள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த அந்த மாணவி தனது பெற்றோரிடம் நடந்த சம்பவங்கள் குறித்து தெரிவித்தார். அவர்கள் பாளையங்கோட்டை அனைத்துமகளிர்போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன்பேரில் போலீசார் விசாரணை நடத்தியதில், ரபீக் மாணவிக்கு பாலியல் ரீதியில் தொந்தரவு கொடுத்தது தெரியவந்தது.

இதையடுத்து ரபீக் மீது போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிந்து அதிரடியாக கைது செய்தனர். அவரைகோர்ட்டில் ஆஜர்படுத்தி பாளையங்கோட்டை சிறையில் அடைத்தனர்.

# கோவில், மதம் தொடர்பான பிரச்சினைகளுக்கு அமைதி பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது: ஐகோர்ட்டு எச்சரிக்கை

சென்னை ஜூலை 28

சேலம் மாவட்டம், ஓமலூர் தாலுகாவில் உள்ள தொளசம்பட்டியில் பெரியாண்டிச்சி அம்மன் பதி கோவில் உள்ளது. இந்த கோவிலில் முப்பூஜை தவம் என்ற பூஜை நடத்துவதில் மணி மற்றும் மாதேசன் தரப்பினர்களுக்குள் தகராறு ஏற்பட்டது. இதையடுத்து பூஜை மேற்கொள்ள போலீஸ் பாதுகாப்பு கேட்டு அதிகாரிகளுக்கு மணி கொடுத்த கோரிக்கை மனு பரிசீலிக்கப்படாததால், சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு, அவரது கோரிக்கையை பரிசீலிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது. இதன் அடிப்படையில், தாரமங்கலம் போலீஸ் இன்ஸ்பெக்டர் இருதரப்பினரையும் அழைத்து அமைதி பேச்சுவார்த்தை நடத்தினார். கோவில் விழாவை அமைதியாக நடத்தும் விதமாக 9 நிபந்தனைகளை இன்ஸ்பெக்டர் விதித்தார்.

இந்த நிபந்தனையை மாதேசன் தரப்பினர் மீறி விட்டதாகவும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட கோரி சென்னை ஐகோர்ட்டில் மணி வழக்கு தொடர்ந்தார். அதேபோல, இன்ஸ்பெக்டர் ஒரு தலைபட்சமாக பேச்சுவார்த்தை நடத்தி, அதில் கட்டாயப்படுத்தி தன் கையெழுத்தை வாங்கி விட்டதாக சென்னை ஐகோர்ட்டில் மாதேசன்வழக்குதொடர்ந்தார்.



இந்த 2 வழக்குகளையும் நீதிபதி பி.வேல்முருகன் விசாரித்தார். மாதேசன் தரப்பில் வக்கீல் வி. இளங்கோவன் ஆஜராகி, 'இன்ஸ்பெக்டர் நடத்திய அமைதி பேச்சுவார்த்தை கூட்டத்தையும், அதில் எடுத்த முடிவையும் ரத்து செய்ய வேண்டும். வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் புதிய அமைதி பேச்சுவார்த்தையை நடத்த உத்தரவிட வேண்டும்' என்று வாதிட்டார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி பி. வேல்முருகன், 'இன்ஸ்பெக்டர் நடத்திய அமைதி பேச்சுவார்த்தை சட்டப்படி செல்லாது. சட்டம் ஒழுங்கை பராமரிப்பது தான் போலீசின் வேலை. அவர்கள் கோர்ட்டு போல் செயல்பட முடியாது. சிவில் மற்றும் மத ரீதியான உரிமை தொடர்பாக அமைதி பேச்சுவார்த்தை கூட்டத்தை நடத்த போலீசாருக்கு மட்டுமல்ல வருவாய்துறை அதிகாரிகளுக்கும் சட்டப்பூர்வமான அதிகாரம் இல்லை.

சமுதாயத்தில் அமைதி நிலவ வேண்டும். சட்டம் ஒழுங்கை பராமரிக்க வேண்டும் என்பதற்காக, இருதரப்பினரின் முழு சம்மதத்துடன் அமைதி பேச்சுவார்த்தை கூட்டம் நடத்தப்படுவது வழக்கம். ஆனால், கோவில் திருவிழா உரிமை போன்றவைகளுக்காக எந்திரத்தனமாகஇந்தநடைமுறையை பின்பற்றக்கூடாது. இன்ஸ்பெக்டர் நடத்திய அமைதி பேச்சுவார்த்தை கூட்டம் சட்டப்படி இல்லை.

அமைதி பேச்சுவார்த்தை என்ற பெயரில் ஒரு தரப்பை மிரட்டி கையெழுத்து என்பது சட்டத்தின் ஆட்சியை போலீசார் சீர்குலைப்பதாகும். எனவே, சிவில் பிரச்சினை, மத நடவடிக்கை, கோவில் நிர்வாகம் உள்ளிட்டவை தொடர்பாக அமைதி பேச்சுவார்த்தை கூட்டத்தை கோர்ட்டு உத்தரவு இல்லாமல் நடத்தக்கூடாது.

இதை அதிகாரிகள் மீறினால், அவர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு மற்றும் சட்டப்படியான நடவடிக்கைகள் கடுமையாக எடுக்கப்படும்என்றுஎச்சரிக்கை செய்கிறேன். இன்ஸ்பெக்டர் நடத்திய அமைதி பேச்சுவார்த்தையையும், அதில் எடுத்த நடவடிக்கையையும் ரத்து செய்கிறேன். மனுதாரர்கள் சம்பந்தப்பட்ட கோர்ட்டை அணுகி பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.

இவ்வாறு நீதிபதி கூறியுள்ளார்.

# கூடங்குளம் அணுமின் நிலையத்தில் புதிய மின்பரிமாற்ற அமைப்பு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்



தூத்துக்குடி, ஜூலை 28

தூத்துக்குடி வாகைகுளத்தில் ரூ.452 கோடியில் விரிவாக்கம் செய்யப்பட்ட விமான நிலையத்தை பிரதமர் மோடி நேற்று இரவில் திறந்துவைத்து நாட்டுக்கு அர்ப்பணித்தார். தொடர்ந்து விமான நிலைய வளாகத்தில் நடந்த பிரமாண்ட விழாவில் பங்கேற்று பல்வேறு திட்டப்பணிகளை தொடங்கி வைத்தார்.

ரெயில்வே துறை சார்பில் நாகர்கோவில் டவுன் நாகர்கோவில் சந்திப்பு கன்னியாகுமரி பாதையை இரட்டிப்பாக்குதல், ஆரல்வாய்மொழி நாகர்கோவில் சந்திப்பு மற்றும் நெல்லை மேலப்பாளையம் ரெயில் பாதையை இரட்டிப்பாக்குதல், மதுரை போடிநாயக்கனூர் ரெயில் பாதையை மின்மயமாக்குதல் ஆகிய ரூ.1,032 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளை நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

இதுதவிர தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்கள் பயன்பெறும் வகையில் கூடங்குளம் அணுமின் நிலைய அலகு 3, 4ல் இருந்து மின்சாரத்தை கொண்டு செல்வதற்கான ரூ.548 கோடி செலவில் 2 ஜிகாவாட் சுத்தமான மற்றும் நிலையான எரிசக்தி மின்பரிமாற்ற அமைப்புக்கு பிரதமர்மோடி அடிக்கல் நாட்டினார். நேற்று ஒட்டுமொத்தமாக தூத்துக்குடியில் நடந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி ரூ.4,900 கோடியில் பல்வேறு திட்டப்பணிகளை திறந்தும், அடிக்கல் நாட்டியும் வைத்தார்.

# தமிழகத்தில் சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு டி.டி.வி. தினகரன் தாக்கு



சென்னை ஜூலை 28

அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

சென்னை எழும்பூரில் கடந்த 18ம் தேதி அடையாளம் தெரியாத போதைக் கும்பலால் தாக்குதலுக்கு உள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த ஆயுதப்படை உதவி ஆய்வாளர் ராஜாராமன் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்திருப்பதாக வெளியாகியிருக்கும் செய்திகள் மிகுந்த வேதனையையும், வருத்தத்தையும் அளிக்கிறது.

காவல் உதவி ஆய்வாளர் ராஜாராமன் தாக்குதலுக்கு உள்ளாகி ஒரு வாரம் கடந்த நிலையிலும், குற்றவாளிகளை இதுவரை கண்டறிய முடியாத காவல்துறையால், தமிழகத்தில் வசிக்கும் பொது மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் எப்படி பாதுகாப்பு வழங்க முடியும்? என்ற கேள்வி அனைவரின் மத்தியிலும் எழுந்துள்ளது.

தமிழகத்தில் பட்டப்பகலில், வீடுகளில், மக்கள் அதிகமாக நடமாடும் இடங்களில், காவல்நிலையங்களுக்கு அருகிலேயே அன்றாடம் சர்வசாதாரணமாக அரங்கேறிக் கொண்டிருக்கும் அடுத்தடுத்த கொலைச் சம்பவங்கள் தமிழகத்தில் சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டை வெளிச்சம் போட்டு காட்டுகின்றன.

எனவே, காவல் உதவி ஆய்வாளர் ராஜாராமன் மீது கொலை வெறித்தாக்குதல் நடத்திய கும்பலை கைது செய்து கடுமையான தண்டனை வழங்குவதோடு, தமிழகத்தின்தலைவிரித்தாடும் போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனை, சட்டவிரோத மதுவிற்பனை, கூலிப்படைகளின் அராஜகம் ஆகியவற்றை அடியோடு ஒழிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# ராணிப்பேட்டை: கிணற்றில் குதித்து இளம்பெண் தற்கொலை: போலீசார் விசாரணை



ராணிப்பேட்டை ஜூலை 28

ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி பஜனை கோவில் தெருவைச் சேர்ந்தவர் சுவேதா (22 வயது), பட்டதாரியான இவர் படித்துமுடித்து வீட்டில் இருந்துள்ளார்.

இவரது தந்தை எழில்மாறன் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பும், தாய் 6 ஆண்டுகளுக்கு முன்பும் இறந்து விட்டனர். இதனால் சுவேதா நெமிலியில் உள்ள தனது சித்தப்பா நந்தகுமார் (45 வயது), வீட்டில் அவரது அரவணைப்பில் வளர்ந்து வந்தார். மேலும் காவேரிப்பாக்கம் அடுத்த மாகாணிப்பட்டு பகுதியில் உள்ள தனது வீட்டிற்கு அவ்வப்போது வந்து செல்வது வழக்கம்.

சுவேதா தனது தாய், தந்தை இருவரின் மறைவால் தனிமையில் இருப்பதாக எண்ணம் தோன்றியதால் அடிக்கடி மனவேதனையில் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் நேற்று முன்தினம் மாகாணிப்பட்டு பகுதியில் உள்ள தனது பாட்டி வீட்டிற்கு சுவேதா வந்தார். அப்போது அங்கு தாய் மற்றும் தந்தை குறித்து பேசியதால் மனமுடைந்த அவர் அந்த பகுதியில் உள்ள விவசாய கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டார்.

கிணற்றில் பிணமாக மிதந்த சுவேதாவை பார்த்து அந்த வழியாக சென்றவர்கள் காவேரிப்பாக்கம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன் பேரில் போலீசார் மற்றும் ராணிப்பேட்டை தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று, சுவேதாவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வாலாஜா அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுதொடர்பாக நந்தகுமார் காவேரிப்பாக்கம் போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார்வழக்குப்பதிவு செய்து சுவேதாவின் தற்கொலைக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தூத்துக்குடியில் தேங்காய் நார் குடோனில் தீ விபத்து: ரூ.10 லட்சம் மதிப்பிலான நார்கள் சேதம்



தூத்துக்குடி ஜூலை 28

தூத்துக்குடி அருகே பேரூரணியில் சாமுவேல் என்பவருக்கு சொந்தமான சாரா கோகோ பைபர் நிறுவனத்தின் தேங்காய் நார் குடோன் உள்ளது. இந்தக் குடோனில் தீவிபத்துஏற்பட்டது. தகவலறிந்து வந்த சிப்காட் நிலைய அலுவலர் கார்த்திகேயன் தலைமையில் சிப்காட் மற்றும் தூத்துக்குடி தீயணைப்பு வீரர்கள் 3 வண்டிகளில் சென்று பல மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.

எனினும் இந்த தீவிபத்தில் ரூ.10 லட்சம்மதிப்பிலான தேங்காய் நார்கள் எரிந்து சாம்பலாகின. தீ விபத்து காரணமாக அந்தப் பகுதி முழுவதும் புகை மண்டலமாக காணப்பட்டது. இது குறித்து புதுக்கோட்டை காவல்நிலையபோலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சட்டவிரோத கட்டுமானங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு மதுரை ஐகோர்ட்டு உத்தரவு



மதுரை ஜூலை 28

மதுரை வாடிப்பட்டி பகுதியை சேர்ந்த செல்வகணேஷ், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், "வாடிப்பட்டி பேரூராட்சி பகுதியில் உள்ள கட்டிடத்தை அகற்றும் நடவடிக்கை சம்பந்தமாக பேரூராட்சி செயல் அலுவலர் நோட்டீஸ் அனுப்பினார். ஆனால் அந்த கட்டிடத்துக்கு அங்கீகாரம் பெறுவது சம்பந்தமாக ஏற்கனவே நாங்கள் விண்ணப்பித்து இருக்கிறோம். அதனை பரிசீலிக்காமல் செயல் அலுவலர் நோட்டீஸ் அனுப்பியது சட்டவிரோதம். எனவே அந்த நோட்டீசை ரத்து செய்து உத்தரவிட வேண்டும்" என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், ஸ்ரீமதி ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு பிளீடர் திலக்குமார் ஆஜராகி, மனுதாரர் கட்டிடத்தை அதிகாரிகள் ஆய்வு செய்ததில் விதிமீறல் இருந்தது தெரியவந்தது. அதன் பேரில் மனுதாரருக்கு நோட்டீஸ் அனுப்பியும் அவர் பதில் அளிக்கவில்லை. இதனால் அந்த கட்டிடத்தை இடிக்கும் நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டனர். தற்போதைய வழக்கு நிலுவையில் இருப்பதால் மேல்நடவடிக்கை நிலுவையில் உள்ளது.

மேலும், அங்கீகாரம் பெறாத கட்டிடங்களை முறைப்படுத்த சட்டம் அனுமதிக்கவில்லை. அவற்றின் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி சுப்ரீம் கோர்ட்டு, ஐகோர்ட்டுகள் ஏற்கனவே பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்து உள்ளன. இந்த வழக்கில் ஐகோர்ட்டு பிறப்பித்த இடைக்கால உத்தரவால் மனுதாரர் கட்டிடத்தின் மீது எடுக்கப்பட்டு வந்த நடவடிக்கையில் சுணக்கம் ஏற்பட்டு உள்ளது என வாதாடினார். விசாரணை முடிவில் நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு வருமாறு:

சட்டவிரோத அல்லது அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களை ஊக்குவிக்க முடியாது என்று சுப்ரீம் கோர்ட்டு ஏற்கனவே தெரிவித்து உள்ளது. இந்த விவகாரத்தில் அதிகாரிகள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரு கட்டிடம் கட்டுவதற்கு முன்பாகவே சட்டப்படி உரிய அனுமதியை பெற வேண்டும். அனுமதி வழங்கிய அதிகாரிகள், முறையாக கட்டுமானம் நடக்கிறதா? என ஆய்வு நடத்த வேண்டும். ஏதேனும் விதிமீறல் இருந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாடு நகர மற்றும் கிராம திட்டமிடல் சட்டம் 1971ன் பிரிவு 54, விதிமீறல் கட்டுமானங்களின் அனுமதியை ரத்து செய்ய அதிகாரம் வழங்குகிறது. அதே சட்டத்தின் பிரிவு 56, அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களை இடிக்க அதிகாரம் அளிக்கிறது.

இந்த வழக்கை பொறுத்தவரை மனுதாரர் தனது கட்டிடத்தின் அனுமதியை மறுவரையறை செய்ய விண்ணப்பித்து உள்ளார். இந்த மனு நிலுவையில் இருப்பது, அந்த கட்டிடத்தின் மீது அதிகாரிகள் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு எந்த வகையிலும் தடையாக இருக்கமுடியாது. இதனை கருத்தில் கொண்டு, இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# 'தாய்மொழி பிடிக்கும் என்பதற்காக பிற மொழிகளை வெறுக்க கூடாது' மராட்டிய கவர்னர் சி.பி.ராதாகிருஷ்ணன்



ஆவடி, ஜூலை 28

ஆவடி அடுத்த பருத்திப்பட்டு, விவேகானந்தா நகரில் உள்ள தனியார் பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் திறப்பு விழா நடந்தது. இதில் மராட்டிய மாநில கவர்னர் சி.பி.ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டார். பின்னர்அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

எனக்கு என் தாய்மொழி பிடிக்கும் என்பதற்காக பிற மொழிகளை, பிற மதத்தினரை வெறுக்க கூடாது. அனைவரும் ஒன்றிணைந்து செயல்படும் போதுதான் நாடு உயர்ந்த நிலைக்கு செல்லும். அரசு பள்ளிகளின்தரமும் உயர்த்தப்படவேண்டும். அதே நேரத்தில் தனியார் பள்ளியில் கூட தரத்தில் உயர்த்தப்பட்டாலும், கட்டணங்களும் ஏழை எளிய மக்களுக்கு எட்டக்கூடிய அளவில் இருக்க வேண்டும்.

அண்ணா பல்கலைக் கழகத்தில் வேந்தர்கள் நியமனம் குறித்து 2 விதமான தீர்ப்புகளை உயர்நீதிமன்றம் வழங்கி இருக்கிறது. அதற்கான விளக்கத்தை கவர்னர் கேட்டுள்ளார். இது தொடர்பாக விரைவில் ஒரு தெளிவு வரும். அரசியல் சாசனப்படி வழங்கப்பட்டுள்ள அதிகார வரம்புக்குள் ஒவ்வொருவரும் செயல்படவேண்டும். மற்றவர்கள் அதிகாரத்துக்குள் நுழைய விரும்பக்கூடாது. வேந்தர்கள் நியமனம் என்பது கவர்னரின் முழுமையான அதிகாரத்துக்கு உட்பட்டதுதான்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கன்னியாகுமரியில் விரைவில் புதிய தொழில்நுட்ப பூங்கா: அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தகவல்



கன்னியாகுமரி, ஜூலை 28

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், வடக்குதாமரைகுளம் மற்றும் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட அனாதைமடம் திடல் பகுதிகளை தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, மாவட்ட கலெக்டர் அழகுமீனா தலைமையில் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின்அனைத்து மாவட்டத்தில் உள்ள ஏழை, எளிய மக்கள் மற்றும் வேலைவாய்ப்பற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கும் வகையிலும், மாவட்டம் முழு வளர்ச்சி அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிக்கும் தமிழ்நாடு அரசின் வளர்ச்சி திட்ட பணிகள் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை ஒரு பெரிய தொழில் நிறுவனங்கள் மூலம் மக்களுக்கு அதிக வேலை வாய்ப்பு வரும் சூழல் இல்லாமல் இருந்தது. அதனை சரி செய்ய வேண்டும் என்பதற்காகவும், படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்ற எண்ணத்தில் 20252026ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் தொழில்துறை சார்பில், கன்னியாகுமரி மாவட்டத்தில் சிப்காட் தொழில்போட்டை மற்றும் மினி தொழில் பூங்கா அமைக்கப்படுமென அறிவித்தார்கள்.

அதன் ஒருபகுதியாக இன்று அகஸ்தீஸ்வரம் வட்டம், வடக்கு தாமரைக்குளம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் 32 ஏக்கர் பரப்பளவில் புதிதாக அமைக்கப்பட உள்ள சிப்காட் தொழில்பேட்டைக்கான இடத்தினை புத்தளம் பேரூராட்சி மணவாளபுரம் பகுதியிலுள்ள படகு தளத்திலிருந்து 6 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கும் இடத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதோடு, தொழில்பேட்டை அமைவதற்கான சாத்திய கூறுகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது.

தொடர்ந்து தென்தாமரைக்குளம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் மூலதன மானிய நிதியின் கீழ் ரூ.0.97 கோடி மதிப்பில் வளமீட்பு பூங்கா செல்லும் சாலையில் தடுப்பு சுவர் அமைக்கும் பணி, கலைஞர் நகர்புற மேம்பாடுத்திட்டத்தின்கீழ்ரூ.1.76 கோடி மதிப்பில் மணக்குடி ஏரியிலிருந்து திடக்கழிவு மேலாண்மை திட்டம் நடைபெறும் இடம் வரையில் சிறுபாலம் அமைக்கும் பணி, சிறப்பு நிதியின்கீழ் ரூ.0.70 கோடி மதிப்பில் 12வது வார்டு பகுதியில் திடக்கழிவு மேலாண்மை, சாலையில் கருந்தளம் அமைத்தல் என மொத்தம் ரூ.3.43 கோடி மதிப்பில் சாலை மற்றும் மேம்பாலம் அமைக்கப்படவுள்ள இடத்தினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட அனாதை மடம் திடலில் சுற்றுச் சூழல் பாதிக்காத வகையில் தொழில்நுட்ப பூங்கா அமைப்பதற்கான இடம் ஆய்வு செய்யப்பட்டது. சுற்றுலா சார்ந்த தொழில் வளர்ச்சிக்கும் சுற்றுலாவை மேம்படுத்தும் வகையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் தொழில்நுட்ப பூங்கா அமைக்கப்படும். இதன் மூலம் படித்த இளைஞர்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்புகள் உருவாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

மேற்சொன்ன ஆய்வுகளின்போது தமிழ்நாடு மாநில உணவு ஆணையத் தலைவர் சுரேஷ்ராஜன், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மகேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப்பிரமணியம், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் காளீஸ்வரி, உதவி இயக்குநர்கள் ராமலிங்கம் (பேரூராட்சிகள்), கணேசன் (நில அளவை), தீபா (மீன்வளத்துறை), செயற்பொறியாளர்கள் பாரதி (மாசு கட்டுப்பாட்டுத்துறை), அழகியநம்பி (தொழில் பூங்கா திருநெல்வேலி), சிப்காட் திட்ட அலுவலர் மாரிமுத்து, மாவட்ட சுற்றுலா அலுவலர் காமராஜ், உதவி சுற்றுலா அலுவலர் சதீஷ்குமார் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# ஹைட்ரஜன் ரெயில் என்ஜின் சோதனை ஓட்டம் வெற்றி: மத்திய மந்திரி தகவல்



சென்னை ஜூலை 28

ரெயில்வே துறையை நவீனமயமாக்கும் முயற்சியில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்த வகையில் பயணிகளின் தேவை மற்றும் எதிர்பார்ப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் வந்தே பாரத், அம்ரித் பாரத் ஆகிய ரெயில்களும் அறிமுகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த வரிசையில் கார்பன் உமிழ்வை குறைக்கும் வகையில், ஹைட்ரஜன் ரெயிலை உற்பத்தி செய்ய மத்திய ரெயில்வே வாரியம் திட்டமிட்டது.

கடந்த ஆண்டு நடந்த மத்திய அரசின் பட்ஜெட்டில் இந்தியாவில் 35 ஹைட்ரஜன் ரெயில்கள் தயாரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதற்காக, ரூ.2,300 கோடி ஒதுக்கப்பட்டது. இதையடுத்து, சென்னை பெரம்பூரில் உள்ள ஒருங்கிணைந்த ரெயில் பெட்டி தொழிற்சாலையில் (ஐ.சி.எப்.) ஹைட்ரஜன் ரெயில் தயாரிக்கும் பணி கடந்த ஆண்டு தொடங்கியது. மொத்தம் 10 பெட்டிகள் கொண்டதாகஇந்தரெயில் தயாரிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில், ஐ.சி.எப். தொழிற்சாலையில் ஹைட்ரஜன் ரெயில் என்ஜின் சோதனை ஓட்டத்திற்கு உட்படுத்தப்பட்டது. தெற்கு ரெயில்வே அதிகாரிகள் குழுவினர், தொழில்நுட்ப வல்லுனர்கள் ஆகியோர் முன்னிலையில் சோதனை ஓட்டம் நடைபெற்றது. அப்போது, சீரான வேகத்தில் இயக்கிப் பார்க்கப்பட்டது.

இதுகுறித்து, மத்திய ரெயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், 'இந்தியா 1,200 எச்.பி. திறன் கொண்ட ஹைட்ரஜன் ரெயிலை தயாரித்து வருகிறது. சென்னை ஐ.சி.எப்.பில் ஹைட்ரஜன் மூலம் இயங்கும் முதல் ரெயில் என்ஜின் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடந்துள்ளது. ஹைட்ரஜன் ரெயில் தொழில்நுட்பம் இந்தியாவை முன்னணி நாடுகளில் ஒன்றாக மாற்றும்'எனகூறியுள்ளார்.

ஹைட்ரஜன் ரெயில் மொத்தம் 2 என்ஜின்களும், 8 பெட்டிகளையும் கொண்டது. முதல் என்ஜின் தயாரிப்பு பணி முழுமையாக முடிந்துள்ளது. 2வது என்ஜின் தயாரிப்பு பணி 60 சதவீதம் நிறைவு பெற்றுள்ளது.

மீதம் உள்ள பணிகள் முடிந்து, வரும் ஆகஸ்ட் மாத இறுதிக்குள் இந்த ரெயில் அடுத்தக்கட்ட சோதனை ஓட்டத்திற்கு உட்படுத்தப்படும் என ஐ.சி.எப்.. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மாமன்னன் ராஜேந்திர சோழனை கவுரவிப்பது எங்கள் பாக்கியம்: பிரதமர் மோடி பேச்சு



சென்னை, ஜூலை 28

பிரதமர் மோடி 2 நாள் சுற்றுப்பயணமாக இன்று (சனிக்கிழமை) தமிழகம் வருகிறார். இதற்காக மாலத்தீவில் இருந்து தனி விமானம் மூலம் இன்று இரவு தூத்துக்குடி வருகிறார். அங்கு ரூ.452 கோடி செலவில் விரிவாக்கம் செய்யப்பட்ட தூத்துக்குடி விமான நிலையத்தை பிரதமர் மோடி திறந்து வைக்கிறார்.

இந்த விழா முடிந்த பிறகு தனிவிமானம் மூலம் இரவு 10.30 மணி அளவில் பிரதமர் மோடி திருச்சி புறப்பட்டு செல்கிறார். தொடர்ந்து நாளை (ஞாயிற்றுக்கிழமை) ஹெலிகாப்டர் மூலம் அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு செல்லும் பிரதமர் மோடி, அங்கு பிரகதீஸ்வரர் கோவிலில் சாமி தரிசனம் செய்கிறார். தொடர்ந்து ஆடித் திருவாதிரை விழாவில் பங்கேற்று, ராஜேந்திர சோழன் நினைவு நாணயத்தையும் பிரதமர் மோடி வெளியிட்டு பேசுகிறார்.

இந்த நிலையில், 'மாமன்னன் ராஜேந்திர சோழனை கவுரவிப்பது எங்கள் பாக்கியம்' என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது;

"இன்று மாலையும் நாளையும், தமிழ்நாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொள்கிறேன். இன்னும் சற்று நேரத்தில் நான் தூத்துக்குடிக்கு செல்வேன். அங்கு பல முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்கள் நாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும். இதில் தூத்துக்குடி விமான நிலையத்தின் புதிய முனையக் கட்டிடமும் அடங்கும். இது குறிப்பாக தமிழ்நாட்டின் தென் பகுதியில் வர்த்தகம் மற்றும் போக்குவரத்து இணைப்பில் ஒரு திருப்புமுனையாக இருக்கும். தொடங்கி வைக்கப்படும் பிற திட்டங்களில் தேசிய நெடுஞ்சாலை 36ன் 50 கி.மீ தூரத்திற்கு சேத்தியாத்தோப்பு சோழபுரம் பிரிவில் 4வழிப்பாதை, 5.16 கி.மீ தூரத்திற்கு தேசிய நெடுஞ்சாலை138 தூத்துக்குடி துறைமுகச் சாலையின் 6வழிப்பாதை ஆகியவையும் அடங்கும்.

துறைமுக உள்கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில், வஉசி துறைமுகத்தின் வடக்குப் பகுதி சரக்குக் கப்பல் நிறுத்துமிடம் III தொடங்கிவைக்கப்படும். போக்குவரத்து இணைப்பு, நிலைத்தன்மை மற்றும் போக்குவரத்தை எளிதாக்கும் மூன்று ரயில்வே திட்டங்களும் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்படும். மேலும், கூடங்குளம் அணுமின் நிலைய அலகுகள் 3 மற்றும் 4ல் இருந்து மின்சாரத்தை வெளியே அனுப்புவதற்கான மிகப் பெரிய மின் பரிமாற்ற திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்படும். இது தமிழ்நாட்டில் எரிசக்தி உள்கட்டமைப்பை மேம்படுத்தும்.

மாமன்னன் முதலாம் ராஜேந்திர சோழனின் தென்கிழக்கு ஆசியாவுக்கான கடல் பயணம், சோழர் காலக் கட்டடக்கலையின் ஒளிரும் எடுத்துக்காட்டாக விளங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க கங்கைகொண்ட சோழபுரம் கோவில் கட்டுமானப் பணி தொடக்கம் ஆகிய வற்றின் ஆயிரமாவது ஆண்டினைக் குறிக்கும் வகையில்,நாளை,ஜூலை 27 அன்று வெகு சிறப்பானதொரு நிகழ்ச்சி நடைபெறுகிறது. முதலாம் ராஜேந்திர சோழனை கௌரவிக்கும் வகையில் ஒரு நினைவு நாணயம் வெளியிடப்படுவது எங்களின் பாக்கியமாகும். ஆடித் திருவாதிரை விழாவும் கொண்டாடப்படும்."

இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

# சென்னை விமான நிலையத்தில் ரூ.1.05 கோடி மதிப்பிலான தங்கம், கஞ்சா பறிமுதல் 2 பயணிகள் கைது




சென்னை, ஜூலை 28

சென்னைவிமானநிலையத்திற்கு சிங்கப்பூரில் இருந்து தங்கம் கடத்தி வரப்படுவதாக சுங்கத்துறை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதன் அடிப்படையில்சிங்கப்பூர்விமானத்தில் வந்திறங்கிய பயணிகளிடம்தீவிரசோதனை நடத்தப்பட்டது.

இந்த சோதனையின் போது ஆண் பயணி ஒருவர் தனது உள்ளாடைக்குள் தங்கத்தை மறைத்து வைத்து கடத்தி வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவரிடம் இருந்து ரூ.20 லட்சம் மதிப்புள்ள 700 கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

இதே போல் தாய்லாந்து நாட்டிற்கு சுற்றுலா சென்றுவிட்டு சென்னை திரும்பிய வாலிபர் ஒருவரிடம் நடத்தப்பட்ட சோதனையின்போது, அவரது உடைமைகளில் 400 கிராம் உயர் ரக கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அடுத்தடுத்து நடந்த சோதனைகளில் சுமார் ரூ.1.05 கோடி மதிப்பிலான தங்கம் மற்றும் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக அதிகாரிகள் 2 பயணிகளை கைது செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மருதமலையில் 184 அடி உயர முருகன் சிலை: சென்னை ஐகோர்ட்டு முக்கிய உத்தரவு



மருதமலை, ஜூலை 28

விலங்குகள் நல ஆர்வலர் முரளிதரன் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்தார். அதில், நீலகிரி வனப்பகுதியில் இருந்து பிற பகுதிகளுக்கு செல்வதற்கு யானைகள் இந்த பாதையை பயன்படுத்துகின்றன.

இந்த பகுதியில் 184 அடிக்குமுருகன்சிலையை அமைக்க வேண்டுமானால், வனப்பகுதிகளை அழிக்க வேண்டும். இது யானைகளின் வழித்தடத்தை பாதிக்கும். அதனால், விலங்குகள், மனிதர்களுக்கு இடையேயான மோதல் மேலும் அதிகரிக்கும். முருகன் சிலையை அமைக்க சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு செய்யப்படவில்லை.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் வனத்துறையின் ஒப்புதல்களை பெறவில்லை. எனவே, முருகன் சிலையை அமைக்கும் பணிகளை நிறுத்தும்படி உத்தரவிட வேண்டும் என்றுமனுவில்முரளிதரன் கூறியிருந்தார்.

மேலும், மற்றொரு யானைகள் வழித்தடமான ஆனைகட்டியில் இயங்கும் சட்டவிரோத ரிசார்ட்களை மூட உத்தரவிட வேண்டும். கோவை, ஆனைகட்டி இடையேயான மாநில நெடுஞ்சாலையில் இரவுநேர போக்குவரத்தை நிறுத்த உத்தரவிட வேண்டும் போன்ற கோரிக்கைகளை அவர்முன்வைத்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் சதீஷ்குமார், பரத சக்கரவர்த்தி ஆகியோர் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது இந்த விவகாரத்தில் வனத்துறை பதிலளிக்கும்படி ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

# சிற்றார் அணையினை மீன்பாசி குத்தகைக்கு பெற இணைய வழி ஏலம்: கன்னியாகுமரி கலெக்டர் அறிவிப்பு



கன்னியாகுமரி ஜூலை 28

கன்னியாகுமரிமாவட்ட கலெக்டர் அழகுமீனா வெளியிட்ட அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, குளச்சல் (இ) தேங்காய்பட்டணம் அலுவலகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளசிற்றார் நீர்த்தேக்கத்தில் 5 ஆண்டுகளுக்கு மீன்பாசி குத்தகைக்கு விடும் பொருட்டு இணைய வழி ஏல அறிவிப்பானது (etender) சென்னை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையரால் கடந்த 24.7.2025 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

சிற்றார் நீர்த்தேக்கத்தின் மீன்பாசி ஏலம் தொடர்பான ஏல அறிவிப்பு, ஏல நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் பார்வையிடலாம். மேலும் இந்த இணைய வழி ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவர்கள் ஒப்பந்தப்புள்ளி படிவம் மற்றும் இதர படிவங்களை மேற்குறிப்பிடப்பட்ட இணையதளத்தில் 19494/F3/2024/13 என்ற ஏல அறிவிப்பு எண்ணினை உள்ளீடு செய்து கட்டணமின்றி இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இணையவழி ஏலத்தில் ஒப்பந்தப்புள்ளியை 7.8.2025 அன்று மாலை 5 மணி வரை சமர்ப்பிக்கலாம். மேலும் ஏலம் தொடர்பான சந்தேகங்கள் ஏதேனும் இருப்பின் in landfisheries15@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பியும், அல்லது கீழ்குளம், முக்கட்டுவிளையில் அமைந்துள்ள தேங்காய் பட்டணம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை நேரில் அணுகியோ நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

எனவே கன்னியாகுமரி மாவட்டம்விளவங்கோடு வட்டத்தில் அமைந்துள்ள சிற்றார் அணையினை மீன்பாசி குத்தகைக்கு பெற விருப்பம் உள்ளவர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஞானசேகரன் வழக்கில் அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆய்வு; மீண்டும் வருவேன் தேசிய மகளிர் ஆணைய தலைவி பேட்டி

சென்னை, ஜூலை 28

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் கடந்த 2024ம் ஆண்டு டிசம்பர் 23ந்தேதி இரவு மாணவி ஒருவரை அந்த பகுதியை சேர்ந்த ஞானசேகரன் என்பவர் பாலியல் கொடுமை செய்தார். இதுகுறித்து மறுநாள் கோட்டூர்புரம் போலீசில் பாதிக்கப்பட்ட மாணவி கொடுத்த புகாரின் அடிப்படையில் ஞானசேகரன் கைது செய்யப்பட்டார்.

ஞானசேகரன் தி.மு.க.வை சேர்ந்தவர் என்பதால், இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றக்கோரி சென்னை ஐகோர்ட்டில் அ.தி.மு.க.வை சேர்ந்த வக்கீல் வரலட்சுமி என்பவர் வழக்கு தொடர்ந்தார். இதையடுத்து, ஐ.பி.எஸ். அதிகாரிகள் சினேகபிரியா, பிருந்தா, ஐமான் ஜமால் ஆகியோர் கொண்ட சிறப்பு புலன் விசாரணைக்குழுவை அமைத்து ஐகோர்ட்டு உத்தரவிட்டது.

இதற்கிடையில் ஞானசேகரனை குண்டர் சட்டத்தில் சிறையில் அடைத்து சென்னை போலீஸ் கமிஷனர் உத்தரவிட்டார். இந்தவழக்கைவிசாரித்தசிறப்புபுலனாய்வுக்குழு அதிகாரிகள், கடந்த பிப்ரவரி மாதம் 24ந்தேதி சைதாப்பேட்டை 9வது குற்றவியல் கோர்ட்டில் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தனர். பின்னர் இந்த வழக்கு சென்னை மகளிர் கோர்ட்டுக்கு மார்ச் 7ந்தேதி மாற்றப்பட்டது.

இந்த வழக்கின் சாட்சிகள் விசாரணை ஏப்ரல் 23ந்தேதி முதல் தொடங்கியது. தினந்தோறும் என்ற அடிப்படையில் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டது. 75 சாட்சி ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன. 29 பேர் சாட்சியம் அளித்தனர். அனைத்து தரப்பு வாதங்களும் கடந்த 20ந்தேதி முடிவடைந்தது. இதையடுத்து இந்த வழக்கின் தீர்ப்பை 28ந்தேதி வழங்குவதாக நீதிபதி ராஜலட்சுமி அறிவித்து இருந்தார்.

தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த வழக்கில் கடந்த மே மாதம் 28ந்தேதி தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதன்படி, ஞானசேகரன் குற்றவாளி என்று நீதிபதி தீர்ப்பு அளித்தார். மேலும் அவருக்கு என்ன தண்டனை வழங்குவது ? என்பது குறித்து ஜூன் 2ந்தேதி அறிவிக்கப்படும் என உத்தரவிட்டார்.

அதன்படி, இந்த வழக்கில் குற்றவாளி ஞானசேகரனுக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிபதி ராஜலட்சுமி உத்தரவிட்டார். மேலும் ஞானசேகரனுக்கு ரூ.90 ஆயிரம் அபராதம் விதித்தும், 30 ஆண்டுகள் எந்த தண்டனை குறைப்பும் இன்றி ஆயுள் தண்டனையை அனுபவிக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார். அதனை தொடர்ந்து ஞானசேகரன் ஏக காலத்தில் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். ஞானசேகரன் மீதான 11 குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்பட்டதால் நீதிபதி இந்த தீர்ப்பை வழங்கினார்.

இந்நிலையில், தேசிய மகளிர் ஆணைய தலைவி விஜயா ரஹத்கர், அண்ணா பல்கலைக்கழகத்தில் இன்று ஆய்வு மேற்கொண்டார். இதன்பின்னர், அவர் அளித்துள்ள பேட்டியில், கல்லூரியில் மாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். சி.சி.டி.வி. கேமராவை பொருத்தி கண்காணிப்பு பணியை தீவிரப்படுத்த வேண்டும். ஞானசேகரன் வழக்கின் முழு விவரங்களை கேட்டறிந்தேன். மீண்டும் ஆய்வு செய்ய அண்ணா பல்கலைக்கழகம் வருவேன் என தெரிவித்தார். மேலும் அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் பாதிக்கப்பட்ட மாணவியை தான் சந்திக்கவில்லை என்றும் விஜயா தெரிவித்துள்ளார்.

# போதைப்பொருள் குறித்து பொதுமக்கள் புகார் தெரிவிக்கலாம்: திருநெல்வேலி எஸ்.பி. தகவல்

திருநெல்வேலி ஜூலை 28

திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்ப தாவது:

திருநெல்வேலி மாவட்ட காவல்துறை போதைப் பொருட்கள்குறித்துபல்வேறுவிழிப்புணர்வுபிரசாரங்களை நடத்தி வருகிறது. அந்த வகையில் திருநெல்வேலி மாவட்டத்தில் தொடர்ந்து இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் இடையே போதைப் பொருட்களின் நடமாட்டத்தை தடுப்பது காவல்துறையின் நோக்கமாகும். போதைப்பொருள் பழக்கம் எதிர்கால தலைமுறையினர் இடையே சிந்திக்கும் திறன்களை குறைத்து, சமூக விரோதச் செயல்கள் அதிகரித்திட காரணமாக அமைந்திடும். எனவே போதைப்பொருள் சம்பந்தமான குற்றம் பற்றிய தகவல்களை ரகசிய வழியில் தெரிவிப்பதற்காக தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட DRUG FREE TN என்ற செயலி தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது.

இந்தச் செயலியின் மூலம் தடை செய்யப்பட்ட போதைப்பொருள்களான கஞ்சா, புகையிலை, குட்கா, பான்மசாலா மற்றும் கள்ளச்சாராயம் போன்றவை தங்கள் விற்பனை பகுதிகளில் பயன்படுத்தப்பட்டாலோ விற்பனை செய்யப்பட்டாலோ அல்லது பதுக்கி வைக்கப்பட்டாவோ DRUG FREE TN என்ற செயலி மூலம் பொதுமக்கள் புகார் தெரிவிக்கலாம். இந்த செயலியின் முக்கிய சிறப்பம்சம் என்னவென்றால், மேற்சொன்ன குற்றங்களில் ஈடுபடுபவர்கள் பற்றிய தகவல்களை மட்டும் தெரிவித்தால் போதும். மேற்சொன்னவாறு தகவல் தெரிவிப்பவரின் பெயர், முகவரி, தொலைபேசி எண் போன்ற எந்த விபரமும் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. மேலும் இந்த தகவல் தெரிவிப்பவரின் எந்த ஒரு விபரமும், இந்த செயலி மூலம் காவல் துறையினருக்கோ அல்லது பிறருக்கோ தெரியவர வாய்ப்பில்லை. எனவே இது போன்ற போதைப்பொருள் சம்பந்தமான குற்றம் நடைபெற்றால் DRUG FREE TN அலைபேசி செயலியை பதிவிறக்கம் செய்து, மேற்சொன்ன குற்றம் சம்பந்தமான தகவல்களை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

28.7.2025

# தவெகவுக்கு களங்கம் ஏற்படுத்தும் விதமாக செயல்படக்கூடாது: கட்சியினருக்கு, தலைமை அறிவுரை



சென்னை, ஜூலை 28
தமிழக வெற்றிக் கழகத்தைசேர்ந்தநிர்வாகிகள், தொண்டர்களுக்கு, அக் கட்சியின்பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் அனுப்பியுள்ள வழிகாட்டு நெறிமுறைகளில் கூறியிருப்பதாவது:

தற்போது சட்டமன்ற தேர்தல் பரப்புரை காலம். கூடுதல் விழிப்புடன் இருக்க வேண்டிய வேளை. கட்சியின் கொள்கைகள், கோட்பாடுகள் மற்றும் குறிக்கோள்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் விதமாக கட்சித் தோழர்கள் ஒருபோதும் செயல்படக்கூடாது.

கட்சித் தலைமையால் முறைப்படி அறிவிக்கப்படாத, அனுமதிக்கப்படாத வேறு வாசகங்களையோ, புகைப்படத்தையோ, ஸ்டிக்கராகவோ, வேறு வடிவங்களாகவோ, கட்சி நிகழ்ச்சிகளுக்காக, பரப்புரைகளுக்காக அல்லது வேறு எந்த காரணத்துக்காகவும் பயன்படுத்தக் கூடாது.

கட்சியின் தலைமையால் பிரத்தியேகமாக தேர்தல் பரப்புரை சார்ந்து அங்கீகரிக்கப்படாத பேனர் டிசைன்கள், இலச்சினைகள், வாசகங்களைபயன்படுத்தக் கூடாது. அங்கீகரிக்கப்பட்ட இலச்சினைகள், வாசகங்களோடு மக்கள் விரும்பும்முதல்அமைச்சர் வேட்பாளர், கட்சித் தலைவர் சார்ந்த வாசகங்கள் மற்றும் படங்களை தவிர்த்து வேறு வாசகங்களையோ, புகைப்படங்களையோ பயன்படுத்தக் கூடாது.

இதனை பின்பற்றாதவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். கட்சி சார்பில் நடத்தப்படும் உள்ளரங்கு, பொதுவெளி, பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளின் போது, கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் பட்டாசு வெடித்துக் கொண்டாடுவதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும். அதேபோல், பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் எவ்வித இடையூறும் இல்லாமல், பொதுமக்களின் உற்ற தோழனாக செயல்பட வேண்டும்.

இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார்.

# அன்புமணி ராமதாஸ் நடைபயணத்துக்கு தடை விதிக்கவில்லை: டி.ஜி.பி. அலுவலகம் விளக்கம்

சென்னை, ஜூலை 28
கல்வி, சமூகநீதி உள்பட 10 உரிமைகளை வலியுறுத்தி பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் உரிமை மீட்பு நடைபயணத்தை செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் தொகுதியில் நேற்று முன்தினம் தொடங்கினார். அவருடைய இந்த சுற்றுப்பயணத்துக்கு பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் எதிர்ப்பு தெரிவித்திருந்தார்.

கட்சியின் நிறுவனரான எனது அனுமதி இல்லாமல் பா.ம.க. கொடியை பயன்படுத்தி நடைபெறும் இந்த சுற்றுப்பயணத்தால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே அன்புமணியின் இந்த பயணத்துக்கு தடை விதிக்க வேண்டும் என்று டாக்டர் ராமதாஸ் தரப்பில் டி.ஜி.பி. அலுவலகத்தில் புகார் கடிதம் அளிக்கப்பட்டது.

அதே வேளையில், திட்டமிட்டப்படி டாக்டர் அன்புமணி ராமதாஸ் தனது பயணத்தை தொடங்கிய நிலையில், அவரது பயணத்துக்கு போலீஸ் டி.ஜி.பி. சங்கர்ஜிவால்தடைவிதித்ததாக நேற்று முன்தினம் இரவு தகவல்கள் வெளியானது. இது தொடர்பான சுற்றறிக்கையும் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் டாக்டர் அன்புமணி ராமதாஸ் நடைபயணத்துக்கு தடை விதிக்கப்படவில்லை என்றும், சுற்றறிக்கை தவறுதலாக புரிந்துக்கொள்ளப்பட்டுள்ளது என்றும் போலீஸ் டி.ஜி.பி. அலுவலகம் தரப்பில் நேற்று விளக்கம் அளிக்கப்பட்டது. இதுதொடர்பாக போலீஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், இந்த நடைபயணத்தால் சட்டம்ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்று பா.ம.க. நிறுவனர் சார்பில் அளிக்கப்பட்ட புகார் கடிதத்தில் கூறப்பட்ட சாரம்சத்தை சுட்டிக்காட்டி அந்தந்த மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகளுக்கு சூழ்நிலைக்கு ஏற்ப முடிவு எடுக்கவும், சட்டம்ஒழுங்கு பாதிக்காத வகையில் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்பட்டது' என்றார்.

# கள்ளக்காதலனுடன் சேர்ந்து வாழ ஆசைப்பட்டு குழந்தையை கொன்றேன் கைதான பெண் அதிர்ச்சி வாக்குமூலம்



கோயம்புத்தூர் ஜூலை 28
கோவை மாவட்டம் இருகூர் பகுதியைச் சேர்ந்தவர் தமிழரசி (30) என்ற இளம்பெண். இவருடைய கணவர் ரகுபதி. இவர்களுக்கு நான்கரை வயதில் அபர்ணாஸ்ரீ என்ற பெண் குழந்தை இருந்தது. ரகுபதி கடந்த சில மாதங்களுக்கு முன்பு மனைவியை பிரிந்து சென்றுவிட்டார். இதையடுத்து தமிழரசி, தனது குழந்தை அபர்ணாஸ்ரீயுடன் தனியாக வசித்து வந்தார். அப்போது அவர் தன்னை அழகாக வீடியோ எடுத்து அதனை முகநூல் பக்கத்தில்பதிவிட்டுவந்தார். மேலும்கட்டிட வேலைக்கும் சென்று வந்தார். இந்த சூழலில் அவருடன் கட்டிட வேலை செய்து வரும் தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த வசந்த் என்பவர் உடன் சில மாதங்களாக பழகி வந்து உள்ளார். அது நாளடைவில் கள்ளக்காதலாக மாறியது. இந்த நிலையில் நேற்று முன்தினம் அவரது நான்கரை வயது பெண் குழந்தை மர்மமான முறையில் உயிரிழந்தது.

இதைத் தொடர்ந்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார் அங்கு இருந்த தமிழரசியை பிடித்து வந்து கோவை ராமநாதபுரம் பகுதியில் உள்ள கோவை மாநகர கிழக்கு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வந்தனர். அப்போது குழந்தை அழுது கொண்டு இருந்ததாகவும், அப்போது அவர் அடித்ததால் குழந்தை இறந்து விட்டதாகவும் தமிழரசி தெரிவித்து உள்ளார்.

இதையடுத்து காவல் துறையினர் தமிழரசி இடம் தீவிர விசாரணை மேற்கொண்டு வந்தனர். மேலும் அவர் வசித்து வரும் இருகூர் பகுதிக்கு நேரில் சென்று சம்பவம் தொடர்பாக விசாரணையில் ஈடுபட்டனர். இந்த கொடூரமான சம்பவத்தில் குழந்தையின் தாயான தமிழரசியிடம்நடத்தப்பட்டதீவிரவிசாரணைகணவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் அவரை விட்டு பிரிந்து தனியாக மகளுடன் வாழ்ந்து வந்ததாகவும், கட்டிட தொழிலாளியாக வேலை செய்து வந்த தமிழரசி, அதே இடத்தில் பணி புரிந்த வசந்த் என்பவருடன் கடந்த சில மாதங்களாக தகாத உறவில் ஈடுபட்டு வந்ததாக கூறப்படுகிறது. இதனைத்தொடர்ந்து கள்ளக்காதலனுடன் குடும்பம் நடத்த இடையூறாக இருந்த குழந்தையை கழுத்தை நெரித்து கொலை செய்தார். இந்நிலையில் போலீசார்தமிழரசியைகைதுசெய்துவிசாரணைநடத்தினர்.

அவர் போலீசாரிடம் அளித்த வாக்குமூலத்தில், "எனது கணவர் பிரிந்து சென்ற பின்னர் வசந்த் என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது. வசந்தைதிருமணம் செய்து, குடும்பம் நடத்த முடிவு செய்தேன். இதுகுறித்து அவரிடம் கூறியபோது, குழந்தை இருந்தால் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்றும், தனியாக வந்தால் ஏற்றுக்கொள்வேன் என்றும் கூறினார். இதனால் வேறு வழியின்றி குழந்தையை கழுத்தை நெரித்து கொலை செய்தேன்" என்று தமிழரசி கூறினார்.

இதற்கிடையில் கொலை செய்ய தூண்டியதாக கள்ளக்காதலன் வசந்தை நேற்று மாலை கைது செய்தனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். கள்ளக்காதலுக்காக நான்கரை வயது பெண் குழந்தையை பெற்ற தாயே கழுத்தை நெரித்து கொலை செய்த சம்பவம் கோவையில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (28.7.2025)

**மேஷம்**: புதிய தொடர்புகள் உருவாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். பணியில் பாராட்டுகள் கிடைக்கும்.

**ரிஷபம்**: அதிக உணர்ச்சிப்பூர்வமான நாள். உடல்நலத்தைக் கவனிக்கவும். தவறான முடிவுகள் தவிர்க்க வேண்டியது அவசியம்.

**மிதுனம்**: தினம் சாதகமாக இருக்கும். புதிய வாய்ப்புகள் வந்து சேரும். வெளியூர் பயணம் சாத்தியம்.

**கடகம்**: நட்பு வட்டத்தில் சிக்கல்கள் ஏற்படக்கூடும். செலவுகள் அதிகரிக்கலாம். பொறுமையாக செயல்படுங்கள்.

**சிம்மம்**: பழைய கடன்கள் அடைப்பு வாய்ப்பு. தாமதம் ஆன வேலைகள் நிறைவேறும். குடும்பத்தில் சந்தோஷம். அதிர்ஷ்ட எண்: 1

**கன்னி**: வேலை தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கும் நாள். மற்றவர்களை நம்பி தவறு செய்ய வேண்டாம்.

**துலாம்**: உத்தியோகத்தில் முன்னேற்றம். உள்சஞ்சாரம் அதிகம் இருக்கும். சகோதரர் உதவியால் நன்மை ஏற்படும்.

**விருச்சிகம்**: திடீர் செலவுகள் வரக்கூடும். தொழில் அல்லது வியாபாரத்தில் கவனம் தேவை. தாமதமாக செயல்பட வேண்டாம்.

**தனுசு**: விழாக்கள், நிகழ்வுகளில் பங்கேற்பீர்கள். குடும்ப உறவுகளில் மகிழ்ச்சி அதிகரிக்கும். செல்வாக்கு உயரும்.

**மகரம்**: அதிக உழைப்பால் வெற்றி. சிந்தித்து செயல்படுவது அவசியம். அன்பான வார்த்தைகள் பெரிய விஷயங்களை சாதிக்கச் செய்யும்.

**கும்பம்**: நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். மனநிலை சமநிலையாக இருக்கும். புதிய ஆர்வங்கள் பிறக்கும்.

**மீனம்**: புதிய திட்டங்கள் தொடங்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி மேலோங்கும். வருமானம் மேம்படும்.

# மக்களை ஏமாற்றவே உங்களுடன் ஸ்டாலின் திட்டம்: தமிழிசை சவுந்தரராஜன் கடும் தாக்கு

தூத்துக்குடி, ஜூலை 28
தூத்துக்குடியில் நேற்று விரிவாக்கப்பட்ட விமான நிலையம் திறப்பு உள்ளிட்ட திட்டப்பணிகளை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக தமிழக பா.ஜ.க. முன்னாள் மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தூத்துக்குடிக்கு வந்தார். அப்போது செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அவர் கூறியதாவது:

வாழ்நாளில் மிகப்பெரிய சாதனையானதினம்இன்று. தூத்துக்குடியில் இருந்து அனைத்து பகுதிகளுக்கும் இணைப்பை ஏற்படுத்தும் வகையில் தூத்துக்குடி விமான நிலையம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று ரூ.4,900 கோடி திட்டங்களையும் பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார். வ.உ.சி, பாரதியார் போன்றோர் விண்ணில் இருந்து வாழ்த்திக் கொண்டு இருப்பார்கள்.

தி.மு.க.வினர் வீடு, வீடாக சென்று பா.ஜ.க. நிதி கொடுக்கவில்லை என்று சொல்வோம் என்கின்றனர். ஆனால் பா.ஜ.க. ரூ.4,900 கோடி கொடுத்துள்ளது. இதுகுறித்து தி.மு.க.வினர் வீடு, வீடாக சென்று சொல்ல வேண்டும். 'உங்களுடன் ஸ்டாலின்' என்று 4 ஆண்டுகளாக செய்ய முடியாததை 45 நாட்களுக்குள் எப்படி செய்ய முடியும்? மக்களுக்கான மனுக்களுக்கு அவ்வப்போது தீர்வு கண்டு இருக்க வேண்டும்.

தமிழக அரசு மக்களை ஏமாற்றிக் கொண்டு இருக்கிறது. ஆனால் மத்திய அரசை குறை சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். மக்களை அப்பட்டமாக ஏமாற்றுவதுதான் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம். கடமை தவறியவர்கள் நீங்கள். இன்னும் 45 நாட்களில் உங்களால் எதுவும் செய்ய முடியாது. அதனை 2026ல் நீங்கள் காண்பீர்கள்.

தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. நேர்மையாக உள்ள அதிகாரிகள் அனைவரும் குறி வைக்கப்படுகின்றனர். இந்தியாவிலேயே தமிழக சுகாதாரத்துறைத்தான் முதல் இடத்தில் இருக்கிறது என்கிறீர்கள். பிறகு முதல்அமைச்சர் ஏன் அங்கு சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை? இவ்வாறு அவர் கூறினார்.

# ரசிகர்களை நம்பி களமிறங்கி இருக்கிறேன் நடிகர் தர்ஷன்





ராஜவேல் இயக்கத்தில் தர்ஷன், காளி வெங்கட், ஆர்ஷா பைஜூஉள்ளிட்டபலர்நடிப்பில்உருவாகியுள்ளதிரைப்படம் 'ஹவுஸ் மேட்ஸ். இந்த படம் வருகிற ஆகஸ்ட் 1ந்தேதி வெளியாக உள்ளது. இந்த நிலையில் சென்னையில் நடைபெற்ற பட விழாவில் தர்ஷன் பேசும்போது, "இதுபோன்ற கதையில் நடிக்க வேண்டும் என்பது எனது நீண்ட நாள் ஆசை. என்னை நம்பி இப்படிப்பட்ட கதாபாத்திரத்தை தந்த படக்குழுவுக்கு நன்றிகள்.

டிரெய்லரை பார்த்துவிட்டு 'இது திகில் படமா?' என்கிறார்கள். அதையும் தாண்டி யூகிக்க முடியாத திரைக்கதையும், ஆச்சரியங்களும் கொண்ட குடும்ப பொழுதுபோக்கு படம் இது. ரசிகர்களை நம்பி களமிறங்கி இருக்கிறேன். அவர்களின் ஆதரவை வேண்டி காத்திருக்கிறேன்" என்றார்.

கதாநாயகி ஆர்ஷா பைஜூ பேசுகையில், "நான் நடித்ததிலேயே பிடித்த நடிகர் தர்ஷன். படத்தில் எனக்கான சந்தேகங்கள், தமிழ் பேசுவதில் ஏற்பட்ட தடங்கல்கள் போன்றவற்றில் அவர் செய்த உதவிகளை மறக்க முடியாது" என்றார்.

"படத்தில் நிறைய சர்ப்ரைஸ் மூட்டைகள் இருக்கிறது. ரசிகர்களுக்கு விருந்து காத்திருக்கிறது'' என்று காளிவெங்கட் குறிப்பிட்டார்.

# நடிகர்களுக்கு மட்டும் சலுகை தருவதா? பாலிவுட் நடிகை ஆதங்கம்



பிரபல இந்தி நடிகையான ராதிகா மதன், சினிமாவில் மாற்றம் கொண்டுவர வேண்டியது அவசியம் என்று பேசியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறும்போது, "நான் கிட்டத்தட்ட ஒருநாளைக்கு 12 மணி நேரம் முதல் 14 மணி நேரம் வரை நடிக்கிறேன். இயக்குநர் சொல்வதுபோல் உழைக்கிறேன். ஆனால் சில நடிகர் நடிகைகளுக்கு அப்படி உழைக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. சில நடிகர்கள் எல்லாம் 8 மணி நேரம் கூட பங்களிப்பு தருவது கிடையாது.

பெண்கள்எங்கள்சூழ்நிலையை சொல்லி அனுமதி கேட்டால்கூட கிடைப்பதில்லை. ஆனால் அதே நடிகர்கள் கேட்டால் உடனடியாக அனுமதி வழங்கப்படுகிறது. நடிகர்களுக்கு வழங்கப்படும் சலுகை, நடிகைகளுக்கு கிடைப்பது இல்லை. இந்த நிலை மாறினால் மட்டுமே சினிமா முன்னேறும்" என்று கூறியுள்ளார். இது பாலிவுட் சினிமாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# எஸ்டிஆர் 49 படத்தின் படப்பிடிப்பு அப்டேட்



சிலம்பரசன் தக் லைப் திரைப்படத்தை தொடர்ந்து அடுத்ததாக இயக்குநர் வெற்றிமாறன் இயக்கும் அடுத்த படத்தில் நடிக்க இருக்கிறார். இப்படம்ஒருவடசென்னையில்நடக்கும்கேங்ஸ்டர் திரைப்படமாக உருவாக இருக்கிறது.

இயக்குநர் வெற்றி மாறன் வடசென்னை படத்துடன் தொடர்புடைய அதே காலகட்டத்துடன் தொடர்புடைய மற்றொரு கதையைப் படமாக்கி வருகிறார். இப்படத்திற்கான அறிவிப்பு வீடியோ படப்பிடிப்பு அண்மையில் நடைபெற்று முடிந்தது. இதில், நடிகர் சிலம்பரசன் நாயகனாக நடிக்க வடசென்னை படத்தில் நடித்த சில நடிகர்கள் நடிப்பதாகத் தெரிகிறது..

இந்த படத்தில், சமுத்திரக்கனி, கிஷோர், ஆண்ட்ரியா, இயக்குனர் நெல்சன் உள்ளிட்டோர் நடிக்கின்றனர். மேலும், இப்படத்தில் நடிகர் சிம்பு இளம் தோற்றத்தில் நடிப்பதற்காக இரண்டு வாரங்களில் 10 கிலோ வரை உடல் எடையைக் குறைத்துள்ளாராம்

சமீபத்தில் இப்படத்தின் படப்பிடிப்பு பணிகள் சென்னையில் தொடங்கியது. இதுதொடர்பான புகைப்படம் ஒன்று இணையத்தில் பரவி வைரலானது. சிம்பு இப்படத்தில் இளமை மற்றும் சிறிய முதுமை தோற்றத்தில் நடிப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், இந்தப்படத்தின் படப்பிடிப்புக்காக சென்னையில் பிரம்மாண்ட செட் அமைத்து வருவதாகவும் படத்தின் முதல்கட்ட படப்பிடிப்பு ஆகஸ்ட் 2வது வாரம் துவங்கவுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தப் படத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வீடியோ விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இங்கிலாந்தின் கனவை தகர்த்த இந்தியா: டிராவில் முடிந்தது 4வது டெஸ்ட்



இந்தியா இங்கிலாந்து அணிகள் இடையிலான 4வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மான்செஸ்டரில் உள்ள ஓல்டுடிராப்போர்டில் நடந்து வருகிறது. இதில் முதல் இன்னிங்சில் முறையே இந்தியா 358 ரன்களும், இங்கிலாந்து 669 ரன்களும் அடித்தன.

பின்னர் 311 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2வது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி 4வது நாள் ஆட்ட நேர முடிவில் 63 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 174 ரன்கள் அடித்திருந்தது. சுப்மன் கில் 78 ரன்களுடனும், கே.எல். ராகுல் 87 ரன்களுடனும் களத்தில் இருந்தனர்.

இதனையடுத்து இந்திய அணி 137 ரன்கள் பின்தங்கி இருந்த நிலையில் 5வது மற்றும் கடைசி நாள் ஆட்டம் இன்று தொடங்கியது. ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே கே.எல்.ராகுல் 90 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வாஷிங்டன் சுந்தர் களமிறங்கினார். மறுமுனையில் சிறப்பாக விளையாடிய சுப்மன் கில் 228 பந்துகளில் சதத்தை நிறைவு செய்தார். சதம் அடித்த சிறிது நேரத்திலேயே சுப்மன் கில் 103 ரன்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ரவீந்திர ஜடேஜா, வாஷிங்டன் சுந்தருடன் சேர்ந்தார். இருவரும் விக்கெட்டை இழந்து விடக்கூடாது என்ற நோக்குடன் நிதானமான ஆட்டத்தை கடைப்பிடித்தனர். அதேநேரத்தில் ஏதுவான பந்துகளை எல்லைக்கோட்டுக்கும் ஓடவிட்டனர். ரவீந்திர ஜடேஜா, ஹாரி புரூக் பந்து வீச்சில் சிக்சர் தூக்கி தனது 5வது சதத்தை கடந்தார். முதல் பந்திலேயே கேட்ச் கண்டத்தில் இருந்து தப்பிப் பிழைத்ததால் கிடைத்த வாய்ப்பை அவர் சரியாக பயன்படுத்தி கொண்டார். இங்கிலாந்துக்கு எதிராக அவர் அடித்த 3வது சதம் இதுவாகும்.

அடுத்த ஒரு ஓவர் கழித்து வாஷிங்டன் சுந்தர் தனது முதல் சதத்தை எட்டினார். அத்துடன் ஆட்டம் டிராவில் முடித்து கொள்ளப்பட்டது. அப்போது இந்திய அணி 2வது இன்னிங்சில் 143 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 425 ரன்கள் எடுத்து 114 ரன்கள் முன்னிலை பெற்று இருந்தது. வாஷிங்டன் சுந்தர் 101 ரன்களுடனும் (206 பந்து, 9 பவுண்டரி, ஒரு சிக்சர்), ரவீந்திர ஜடேஜா 107 ரன்களுடனும் (185 பந்து, 13 பவுண்டரி, ஒரு சிக்சர்) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இங்கிலாந்து தரப்பில் கிறிஸ் வோக்ஸ் 2 விக்கெட்டும், ஜோப்ரா ஆர்ச்சர், பென் ஸ்டோக்ஸ் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர். சதம் அடித்ததுடன் 6 விக்கெட்டும் எடுத்த இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸ் ஆட்டநாயகன் விருது பெற்றார். 5 போட்டிகள் கொண்ட இந்த தொடரில் இங்கிலாந்து அணி 21 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இவ்விரு அணிகள் இடையிலான 5வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் வருகிற 31ந் தேதி தொடங்குகிறது.கடைசி நாளில் இந்திய அணியை சுருட்டி வெற்றியை ருசித்துவிடலாம் என்ற இங்கிலாந்து அணியின் கனவை இந்திய பேட்ஸ்மேன்கள் தவிடுபொடியாக்கினர்.

# டெஸ்ட் கிரிக்கெட்: கவாஸ்கர், டான் பிராட்மேனுடன் 3வது வீரராக இணைந்த சுப்மன் கில்



இந்தியா இங்கிலாந்து அணிகள் இடையிலான 4வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மான்செஸ்டரில் உள்ள ஓல்டுடிராப்போர்டில் நடந்து வருகிறது. இதில் முதல்இன்னிங்சில்முறையே இந்தியா358ரன்களும், இங்கிலாந்து 669 ரன்களும் அடித்தன.

பின்னர் 311 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2வது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி 4வது நாள் ஆட்ட நேர முடிவில் 63 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 174 ரன்கள் அடித்திருந்தது. சுப்மன் கில் 78 ரன்களுடனும், கே.எல். ராகுல் 87 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். இந்த நிலையில் 5வது மற்றும் கடைசி நாள் ஆட்டம் இன்று நடைபெற்று வருகிறது. ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே கே.எல். ராகுல் 90 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வாஷிங்டன் சுந்தர் களமிறங்கினார். மறுமுனையில் சிறப்பாக விளையாடிய சுப்மன் கில் 228 பந்துகளில் சதத்தை நிறைவு செய்தார். சதம் அடித்த சிறிது நேரத்திலேயே சுப்மன் கில் 103 ரன்களில் ஆட்டமிழந்தார். நடப்பு தொடரில் சுப்மன் அடித்த 4வது சதம் இதுவாகும். இதன் மூலம் ஒரு டெஸ்ட் தொடரில் அதிக சதங்கள் அடித்த கேப்டன்களின் மாபெரும் சாதனை பட்டியலில் சர் டான் பிராட்மேன், சுனில் கவாஸ்கர் ஆகியோருடன் 3வது வீரராக சுப்மன் கில் இணைந்துள்ளார். மூவரும் தலா 4 சதங்கள் அடித்துள்ளனர்.

பின்னர் கை கோர்த்த வாஷிங்டன் சுந்தர் ஜடேஜா கூட்டணி சிறப்பாக விளையாடி இந்திய அணியை 2வது இன்னிங்சில் முன்னிலை பெற வைத்தது. இருவரும் அரைசதம் கடந்த நிலையில் களத்தில் உள்ளனர். பார்ட்னர்ஷிப் 150 ரன்களை கடந்து செல்கிறது. இதனால் இந்த ஆட்டம் டிராவில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.